Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only




To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

TO SERVE THE LORD AND HIS PEOPLE

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



மலர் 20 ஜனவரி 2023 இதழ் 01

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.01.2023 | Sunday | 8.30 am | Holy Mass<br>Holy Mass | Manjathoppu<br>Vazhode |
| 02.01.2023 | Monday | | Marriage | Fathimanagar |
| 04. 01.2023 | Wednesday | 10.00 am | Marriage | Padanthallumoodu |
| 05. 01.2023 | Thursday | 5.00 pm | Holy Mass | Cherianadu |
| 06.01. 2023 | Friday | | Marriage<br>School Day | Pllikonam<br>Kirathoor |
| 08.01.2023 | Sunday | | Holy Mass<br>Kulasekaram District Day | Puthur<br>Annakarai |
| 09.01.2023 | Monday | 6.30 am<br>10.00 am<br>3.30 pm | Holy Mass<br>Marriage<br>UCC Election | DM Convent–Mtm<br>Cathedral<br>Bishop's House - Kottar |
| 10.01.2023 | Tuesday | 9-12.30pm | Class | DM Convent - Kodapanakunnu |
| 11-12.01.2023 | Wednesday-Thursday | | Preaching | Coimbatore |
| 14.01.2023 | Saturday | 10.30 am | Holy Mass | Peruvilai |
| 15.01.2023 | Sunday | <br>5.00 pm | Holy Mass<br>Holy Mass | Parvathipuram<br>Ayoor |
| 16.01.2023 | Monday | | Holy Mass | Palyamkottai |
| 17.01.2023 | Tuesday | | Labour Commission Meeting | Trichy |
| 18.01.2023 | Wednesday | | TNBC | Thoothukudi |
| 19.01.2023 | Thursday | 3.00 pm | MPD Nithi Ltd. | Bishop's Houses |
| 20.01.2023 | Friday | 1.30 pm<br>5.00 pm | School Day<br>Holy Mass | Kirathoor H.S.<br>Ambilikonam (Mal) |
| 21.01.2023 | Saturday | 7.00 pm | Vespers | Madathattuvilai |
| 22.012023 | Sunday | 11.00 am | Holy Mass | Thottavaram |
| 23-25.012023 | Monday - Wednesday | | Class | Major Seminary Trivandrum |
| 26.01.2022 | Thursday | 4.00 pm | Maraikalvi Sankamam<br>Homily | <br>Manalikarai |
| 27.01.2023 | Friday | | School Day | Palavilai |
| 28.01.2023 | Saturday | | Jubilee (Bp.Ignatios) | Mavelikara |
| 29.01.2023 | Sunday | 3.00 pm | Legion of Mary | Pastoral Centre |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 ஜனவரி 2023 இதழ். 1

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM


*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***

***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***

***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***

***Diocese of Marthandam***




இறையருளினாலும் திரு ஆட்சிபீடத்தின் அனுகூலத்தாலும்
மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்
பெருந்தகை **வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆண்டகையிடமிருந்து தம் ஆளுகைக்
குட்பட்ட அனைத்து குருக்களுக்கும்
துறவிகளுக்கும் இறைமக்கள்
அனைவருக்கும்
ஆசீர்.

Pro. No. EPL 2/2022 17.12.2022

***கிறிஸ்துவுக்குள் பிரியமான குருக்களே, துறவியரே, அன்பு இறைமக்களே!***

“எல்லாம் அமைதியில் ஆழ்ந்திருந்தபோது, நள்ளிரவு கடந்துவிட்ட வேளையில், எல்லாம்வல்ல உம் சொல் விண்ணகத்திலுள்ள அரியணைவிட்டு எழுந்து, அஞ்சா நெஞ்சம் கொண்ட போர்வீரனைப் போல் அழிவுக்கெனக் குறிக்கப்பட்ட நாட்டின் மீது வந்து பாய்ந்தது” (சாஞா 18:14-15)

**கிறிஸ்துமஸ் : “மறைந்திலங்கும் நிகழ்வுகளின் நிகழ்வு”**

பல்வேறு அடிமைத்தனங்களில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருந்த அடிமைகளை மீட்க, கடவுள் ஓர் அடிமையின் வடிவை ஏற்று, சாதாரண மனிதருக்கு ஒப்பானார் (பிலி 2:7). மனிதக் குழந்தையாக, அதிலும் ஏழை குழந்தையாக, மண்ணின் மடியில் தவழ்ந்தார். அந்த ஒப்பற்ற நாளையே கிறிஸ்து பிறப்பு விழாவாக நாம் கொண்டாடி மகிழ்கிறோம். கடவுள் மனிதனான மாபெரும் நிகழ்வை கொண்டாடும் இந்நாளில் அனைவருக்கும் வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

இவ்வுலகில் ஆயிரக்கணக்கான விழாக்களை நாம் ஆரவாரத்தோடு கொண்டாடுகின்றோம். ஒவ்வொரு விழாவும் அதற்கே உரித்தான பொதுவான சில நோக்கங்களையும் சிறப்பு நோக்கங்களையும் கொண்டுள்ளது. கிறிஸ்து பிறப்பு விழாவின் பொதுவான நோக்கம் "இறை மனித உறவு" என்பதாகும். இந்த பொதுவான நோக்கத்தை அதன் ஆழங்களில் புரிந்து கொள்வதற்கு மறைந்திருக்கும் மறைபொருளாகிய சிறப்பு நோக்கங்களை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எண்ணற்ற சிறப்பு நோக்கங்களை உள்ளடக்கியிருப்பதால் இந்த கிறிஸ்துமஸ் நிகழ்வுகளின் நிகழ்வு என்று அழைக்கப்படுகிறது.

### 1. கிறிஸ்துமஸ் : வரலாற்று நிகழ்வு

கிறிஸ்துவின் பிறப்பு முழுக்க முழுக்க வரலாற்றைச் சார்ந்தது என்பதை, அன்று பாலஸ்தீனா நாட்டை காலனி ஆதிக்கமாக கொண்டிருந்த உரோமைப் பேரரசு பற்றிய குறிப்பு தெளிவுப் படுத்துகின்றது. அதாவது அகஸ்து சீசர் பாலஸ்தீனா நாட்டை காலனி ஆதிக்க நிலையில் ஆண்டு நடத்தியவர். இக்காலனி ஆதிக்க காலத்தில் சிரியா நாட்டின் ஆளுநராக குரேனியு இருந்தார். இவரது காலத்தில் தான் மக்கள் கணக்கெடுப்பு நடந்தது. மக்கள் தொகைக் கணக்கை முன்னிட்டு, தங்கள் பெயரைப் பதிவு செய்ய தாவீதின் ஊராகிய பெத்தலகேமுக்கு மரியாவும் யோசேப்பும் சென்றனர். இங்கு வைத்து வாழுமுன் வரலாறு கொண்டவரின் வாழ்க்கை, வரலாற்றை இரண்டாக பிரித்தது.

### 2. கிறிஸ்துமஸ் : தெய்வீக நிகழ்வு

தூய யோவான் கிறிஸ்துவை கடவுளின் வார்த்தையாக பார்க்கின்றார் (யோவா 1:1-2). கடவுளின் வார்த்தையானவர் மனிதராதல் வாயிலாக உலக வரலாற்றில் பங்கேற்றார். தூய பவுலடியார் இக்கருத்தை தனது திருமுகத்தில் தெளிவுப்படுத்துகிறார். "கடவுள் வடிவில் விளங்கிய அவர் ... மனித உருவில் தோன்றினார்" (பிலி 2:6-7). இந்த மனிதராதலில் ஓர் தெய்வீகம் அடங்கியிருக்கின்றது. இயேசு பிறந்த செய்தியை வானதூதர்கள் வழியாக பெற்ற



இடையர்களை ஆண்டவரின் மாட்சி சூழ்ந்துள்ளதாக லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார் (லூக் 2:9). 'ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர்' (லூக் 2:11) என்ற தெய்வீக குறிப்புடன் இயேசு இடையர்களுக்கு அறிமுகம் செய்யப்படுகிறார். இயேசுவின் பிறப்பு ஓர் வரலாற்று நிகழ்வு, ஆயினும் அதில் ஓர் தெய்வீகம் துலங்குகின்றது.

### 3. கிறிஸ்துமஸ் : இறைவன் நம்மிடையே குடிகொண்ட நிகழ்வு

வார்த்தையானவர் நம்மிடையே குடிகொண்டார் (யோவா 1:14). இது தற்காலிக குடிகொள்ளுதல் அல்ல மாறாக நிரந்தரமான குடிகொள்ளுதல். எனவேத்தான் இயேசு ஒரு விடுதியில் பிறக்காமல், மாடுகளை அடைக்க பயன்பட்ட ஒரு தொழுவத்தில் பிறந்தார். இயேசு பிறப்பில் விளங்கிய எளிமைக்கு அடையாளமாகிய இத்தொழுவம் யூத வழக்கப்படி மக்கள் வாழும் வீட்டோடு இணைக்கப்பெற்ற ஒன்று. தங்கும் விடுதியில் பிறக்காமல் ஒரு வீட்டுடன் இணைந்த தொழுவத்தில் பிறந்ததன் உட்பொருளை எரேமியாவின் மெசியா பற்றிய இறைவாக்கு விளக்குகின்றது. "இஸ்ரயேலின் நம்பிக்கையே! துன்ப வேளையில் அதனை மீட்பவரே! நாட்டில் நீர் ஏன் அன்னியரைப் போல் இருக்கவேண்டும்? இரவு மட்டும் தங்க வரும் வழிப்போக்கரைப்போல் நீர் ஏன் இருக்க வேண்டும்? நீர் ஏன் திகைப்புற்ற மனிதர்போல் தோன்ற வேண்டும்? ஏன் காக்கும் திறனற்ற வீரர் போல் காணப்பட வேண்டும்? ஆயினும், ஆண்டவரே! நீர் எங்கள் நடுவில் உள்ளீர்; உமது பெயராலேயே நாங்கள் அழைக்கப்படுகிறோம்; எங்களை கைவிட்டு விடாதேயும் (எரே 14:8-9). எந்த மக்களை மீட்க வந்தாரோ அந்த மக்களுடன் நிரந்தரமாக வாழ இயேசு விரும்பியதால் விடுதியில் பிறக்காமல் வீட்டோடு இணைந்த மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்றார்.

### 4. கிறிஸ்துமஸ்: வாக்குறுதியின் நிறைநிகழ்வு

பாவம் செய்த மனிதன் பலவாறு தண்டிக்கப்பட்டாலும் பாசமிகு இறைவன் வாக்குறுதியை வாக்களிக்கின்றார். "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்"

(தொநூ 3:15). இவ்வாக்குறுதி பல இறைவாக்கினர்கள் வழியாக மக்களுக்கு நினைவூட்டப்பட்டது (எசா 7:14, மலா 3:1). மக்களும் வாக்குறுதியின் முழுமைக்காக எதிர்பார்த்து இருந்தனர். வாக்குறுதி அளித்த இறைவன் அதை நிறைவேற்றினார் என்பதன் அடையாளமே கிறிஸ்துமஸ்.

**5. கிறிஸ்துமஸ் : அமைதியின் நிகழ்வு**

'மீட்பர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார்' (லூக் 2:11), என்ற மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை இடையர்களுக்கு அறிவித்த பின்னர், விண்ணகத் தூதர் பேரணி வானதூதருடன் சேர்ந்து, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:13-14) என்று கடவுளைப் புகழ்ந்தார்கள். வரவிருக்கும் மெசியா "அமைதியின் அரசர்" என்று எசாயா இறைவாக்கினர் (14:27) முன்னறிவித்திருந்தார்; இந்த மெசியா பிறந்ததும் அமைதியான இரவில் (சாஞா 18:14) வானதூதர்கள் கொடுத்த மகிழ்ச்சியின் செய்தியும் "அமைதி உண்டாகுக"என்பதே. "அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர்" (மத் 5:9) என்று கூறிய இயேசு தனது பணிவாழ்வில் அதிகம் போதித்ததும் அமைதியைப்பற்றியே. அவர் வழியாகவே நாம் அமைதியைக் காண வேண்டும் (யோவா 16:33). இவ்வுலகைவிட்டுச் செல்லுமுன் அவர் தனது அமைதியை நமக்குப் பிரியாவிடை பரிசாக (யோவா 14:27) அளித்தார். உயிர்ப்பிற்குப் பின்னர் தனது சீடர்களுக்குத் தோன்றும்போது, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். கடவுள் அமைதியாக உருவெடுத்து, அமைதியை நம் மத்தியில் விதைத்து, நாமும் அமைதியாக வாழ வேண்டும் என்று பணித்து, அமைதியை நமக்குப் பரிசாக விட்டுச் சென்றார். இவ்வாறு அமைதியான இரவில் அமைதியை நிலைநாட்ட விண்ணகம் விட்டு மண்ணகம் வந்த நாளே கிறிஸ்துமஸ்.

**6. கிறிஸ்துமஸ் : எதிர்நோக்கு மற்றும் பிறரன்பின் நிகழ்வு**

போர்கள், போர் முழக்கங்கள், அரசியல் குழப்பங்கள், இயற்கை பேரிடர்கள், பெரும் தொற்று நோய்கள் இவற்றின் மத்தியில்



கிறிஸ்துமஸ் கடந்து வருகிறது. கிறிஸ்து பிறந்தார் என்ற செய்தி மக்களுக்கு எதிர்நோக்கை வழங்குகிறது. ஏனெனில் நம்மிடையே குடிகொள்ளும் இயேசுவோடு இணைந்து பயணிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. அவர் கொண்டு வந்த மீட்பில் நம்புவோர்க்கு நிலையான எதிர்நோக்கு பரிசாக கிடைக்கிறது. தந்தை கடவுள் தம் ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பினார். அன்பே உருவான கடவுள் கிறிஸ்துவை நமக்காக தந்து தமது அன்பை வெளிப்படுத்தினார். உள்ளத்தில் வந்து பிறக்கும் இயேசுவை அடைத்து வைக்க இயலாது. இது நம்முடைய சொல்லிலும் செயலிலும் வெளிப்படும். எனவே கிறிஸ்துமஸ் காலம் அன்பிரக்க செயல்கள் செய்யும் காலம். ஏழை கோலமாக வந்த இயேசுவை பின்பற்றுபவர்கள் ஏழைகளை மறந்துவிட கூடாது. ஏழைகளின் கைகளில் வைக்கும் உதவியும் ஆலய காணிக்கையாக பீடத்தில் வைக்கும் காணிக்கையும் சமமே. உள்ளத்தில் பிறந்த இயேசு அதரங்களினால் அறிவிக்கப்பட வேண்டும், கைகளினால் வெளிப்படுத்தப்பட வேண்டும். வானதூதர்கள் அதரங்களினால் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வை உலகிற்கு அறிவித்தனர். ஞானிகளோ தங்கள் கரங்களினால் காணிக்கை சமர்ப்பித்து மகிழ்வை வெளிப்படுத்தினர். அப்பத்தின் வீட்டில் நாம் யாவரும் உணவு பெற அப்பமாக பிறந்தவரின் நாளில் உணவின்றி தவிக்கும் யாவரையும் நோக்கி நம் ஆறுதலின் வார்த்தைகளையும் அன்பிரக்க கரங்களையும் நீட்டுவோம்.

இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

*அன்புடன்,*



**† மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்

# குருக்கள் செய்திகள்

இம்மாத குருக்களுக்கான தியானம் 19-12-2022 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து அருட்தந்தை அனலின் (குழித்துறை மறைமாவட்டம்) அவர்கள் வழிநடத்தினார்கள். தியானத்தை தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் நடைப்பெற்றது. இதில் மறைமாவட்டத்தில் உள்ள அருட்தந்தையர்கள் பங்கெடுத்து வாழ்த்துக்களை பரிமாறி கொண்டனர்.



# மறைமாவட்ட உபதேசியர்களுக்கான கூடுகை

மார்த்தாண்ட மறைமாவட்ட பங்கு தளங்களில் பணிபுரியும் உபதேசியர்களுக்கான கூடுகை 18.12.2022 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தோடு பரிசுகளும் பரிமாறப்பட்டது. இதில் ஏராளமான உபதேசியார்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.





# MCYM
## Youth Apostolate

இளையோர்களுக்கான மறைமாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் 04.12.2022 அன்று மார் எப்ஃரேம் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வைத்து நடைபெற்றது. மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் ஜெபத்துடன் போட்டிகளை துவங்கிவைத்தார்கள். முதலாவதாக 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தை மறைமாவட்ட முதன்மைக் குரு Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் துவங்கி வைத்தார். இப்போட்டிகளில் மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற இளைஞர்கள் பங்கெடுத்து சிறப்பித்தார்கள்.





# தாய்மார் சங்கம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட தாய்மார் சங்கத்தின் கிறிஸ்துபிறப்பு விழா மற்றும் பாடல் போட்டிகள் 17.12.2022 அன்று செல்லங்கோணம், புனித ஜோசப் ம.சி.க. மேல்நிலைப்பள்ளியில் வைத்து காலை 10 மணியளவில் ஆரம்பமானது. விழாவை அருட்தந்தை ஜிபு மேத்யூ அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவில் மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதல் இரண்டு இடங்களை பெற்ற பங்குகள் போட்டியில் கலந்து கொண்டார்கள். மொத்தம் 10 ஆலயங்களில் இருந்து பங்கேற்று சிறப்பித்தார்கள். செருப்பாலூர் பங்கு முதல் இடத்தையும், தேமானூர் பங்கு இரண்டாம் இடத்தையும், செல்லங்கோணம் பங்கு மூன்றாம் இடத்தையும் தட்டிச்சென்றார்கள். வெற்றி பெற்ற பங்கிற்கு சுழற்கோப்பை மற்றும் Cash Award-ம் வழங்கப்பட்டது. போட்டிகளை தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினர்களாக D.M. சமூகத்தின் St. Joseph's Province மாகாணத்தலைவி Mother Anila Christy மற்றும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அவர்கள் மற்றும் Sr. பெனடிக்டா (Mission Councilor) அவர்கள் கலந்து கொண்டு தாய்மார்களை ஊக்குவித்தும், வாழ்த்துரை கூறியும் தாய்மார்களை மகிழ்வித்தார்கள். இக்கூட்டத்தை மறைமாவட்ட இயக்குநர், Sr. Angel Jose மற்றும் மறைவட்ட இயக்குநர்கள், மறைமாவட்ட தலைவி திருமதி. மினி மற்றும் பொறுப்பாளர்கள் அனைவரும் திட்டமிட்டு சிறப்புடன் வழி நடத்தினார்கள்.








# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## நிறைவாழ்வு சங்கம் – கிறிஸ்மஸ் விழா

மிட்ஸ் சுய உதவி குழுக்களின் பொறுப்பாளர்களை ஒன்றிணைத்து 16.12.2022 அன்று கிறிஸ்மஸ் விழா நடத்தப்பட்டது. மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடைபெற்ற இவ்விழாவிற்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமை வகித்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக மறைமாவட்ட முதன்மை குரு மோண். ஜோஸ் பிறைட், ஆஸ்திரேலியாவை சேர்ந்த திரு. கிரேக் ஹோலண்ட், அட்வகேட் திருமதி. எடிட் பால், காரிதாஸ் இந்தியாவின் சேனல் மேனேஜர் டாக்டர் ஜாண் ஆரோக்கியராஜ், திரு. ஜஸ்டின் ராஜ் (ADSP, Principal of Police Training Institute, Tuticorin), ஐசிஐசிஐ வங்கி மேலாளர் திரு. பச்சை பெருமாள், திரு. மோனிகண்டன், பெடரல் வங்கி மேலாளர் திருமதி. நிஷா ஆகியோர் கலந்து கொண்டனர். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் விருந்தினர்களை வரவேற்றார்கள். ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி வழங்கி கேக் வெட்டி கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். சிறப்பு விருந்தினர்களின் வாழ்த்துரைகளோடு நடைபெற்ற இவ்விழாவில் எழுவோம் இயக்கம் Phase III திட்டத்தை டாக்டர் ஜாண் ஆரோக்கியராஜ் அவர்கள் துவக்கி வைத்தார்கள். தொடர்ந்து









பெடரல் வங்கி சார்பில் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்குவதற்கான காசோலையினை ஆயர் அவர்களிடம் வங்கி மேலாளர் திருமதி. நிஷா அவர்கள் வழங்கினார்கள். விழாவில் 20 ஆண்டுகள் நன்முறையில் செயல்பட்டு வரும் சுய உதவி குழுக்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது. மேலும் போட்டிகளில் வெற்றி பெற்ற பொறுப்பாளர்களுக்கும், மிட்ஸ் ஐக்கிய சுடருக்கான குறுக்கெழுத்து போட்டிகளில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் தேசிய கீதத்துடன் விழா நிறைவு பெற்றது. இவ்விழாவில் மிட்ஸ் மண்டல இயக்குநர்கள், வங்கி ஊழியர்கள் சுய உதவி குழு பொறுப்பாளர்கள் என 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### தளிர்கள் உலகம் – கிறிஸ்மஸ் விழா

மிட்ஸ் தளிர்கள் உலக பயனாளிகளுக்கான கிறிஸ்மஸ் விழாவானது 17.12.2022 அன்று மிட்ஸ் கலையரங்கில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவில் பாறசாலை மறைமாவட்ட ஆயர் மேதகு Thomas Mar Eusebios அவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பு விருந்தினர்களாக தமிழக சமூகப் பணி மையத்தின் இணை இயக்குநர் அருட்தந்தை ஆரோக்கிய சாமி, ஆஸ்திரேலியாவை சேர்ந்த திரு.கிரேக் ஹோலண்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி கிறிஸ்மஸ் செய்தியளித்தார்கள். திரு..கிரேக் ஹோலண்ட் அவர்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் Change The Way We Care -Phase III திட்டமானது திரு. ஆரோக்கிய சாமி அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. பின்னர் பயனாளிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது. மேலும் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், வகுப்புகளுக்கு ஒழுங்காக வருகை தந்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் 700 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

### கடன் உதவி திட்டங்கள்

14.12.2022 அன்று மிட்ஸ் விருட்சம் கடன் உதவி திட்டதின் வழியாக சுய உதவி குழுக்களில் உள்ள உறுப்பினர்களுக்கு ரூபாய் வழங்கப்பட்டது.

### பிற நிகழ்வுகள்

மிட்ஸ் பணியாளர்களுக்கான கிறிஸ்மஸ் விழாவானது 22.12.2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இவ்விழாவிற்கு ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டு பணியாளர்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை பகிர்ந்தார்கள்.



## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை இயேசுதாஸ்
ஜனவரி 06



அருட்தந்தை ஸ்டீபன் மாத்தார்
ஜனவரி 08



அருட்தந்தை ஸ்டீபன் பாலவிளை
ஜனவரி 08



அருட்தந்தை தேவதாஸ்
ஜனவரி 14



அருட்தந்தை அர்னால்டு டயஸ்
ஜனவரி 15



அருட்தந்தை சிபி
ஜனவரி 24



அருட்தந்தை பாபுராஜ்
ஜனவரி 31

# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

குலசேகரம் மறைவட்டத்தில் பணிபுரியும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான கூடுகையானது ஆலஞ்சோலை D.M. கன்னியர் இல்லத்தில் வைத்து 13.12.2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் எல்லா அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்துக்கொண்டு தங்களுடைய பங்குபணி அனுபவத்தையும், மறைவட்ட வளர்ச்சியை பற்றிய கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார்கள்.



குலசேகர மறைவட்ட மறைக்கல்வி கலைப்போட்டிகள் 03.12.2022 அன்று அணக்கரை பங்கு வளாகத்தில் வைத்து நடைப்பெற்றது. அனைத்து பங்குகளிலிருந்தும் மாணவ மாணவிகள் போட்டிகளில் சிறப்பாக பங்கெடுத்தார்கள். இந்நிகழ்வுகளில் மறைவட்ட குருக்களும், அருட்சகோதரிகளும், ஏராளமான மறைக்கல்வி ஆசிரியர்களும் கலந்துக் கொண்டார்கள். போட்டியின் இறுதியில் முதல் மூன்று இடங்கள் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. குறிப்பாக 2022-ம் ஆண்டின் Overall - Championship - ஐ செருப்பாலூர் பங்கும், எழுத்துப்போட்டியில் முதல் இடத்தை மாத்தார் பங்கும், இரண்டாம் இடத்தை செருப்பாலூர் பங்கும், கலைப்போட்டியின் முதல் இடத்தை செருப்பாலூர் பங்கும் இரண்டாவது இடத்தை மாத்தார் பங்கும் தட்டிச் சென்றன.

மறைவட்ட இளையோருக்கான கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் மற்றும் கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டிகள் 18.12.2022 அன்று செருப்பாலூர் பங்கில் வைத்து மறைவட்ட இயக்குநர் பேரருட்தந்தை சதீஷ் குமார் அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. அதே நாளில் மதியம் 2 மணிக்கு



மறைவட்ட தூயக பணியாளர்களுக்கான கூடுகை மற்றும் பயிற்சி வகுப்புகள் செருப்பாலூர் பங்கில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ராபர்ட் அவர்களின் முன்னிலையில், திருத்தொண்டர் விபின் ராஜ் மற்றும் அருட்சகோதரர் ஆல்பின் வழிநடத்தினார்கள்.

மறைவட்ட தாய்மார்களின் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் மற்றும் போட்டிகள் 11.12.2022 அன்று செருப்பாலூர் பங்கில் வைத்து இயக்குநர் அருட்சகோதரி மேரி ஆனந்த் முன்னிலையில் நடைப்பெற்றது. அதே நாளில் குலசேகரம் வட்டார வின்சென் தே பவுல் சபையின் சார்பாக கிறிஸ்து பிறப்புக் கொண்டாட்டமும், பல நலதிட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.

## கொல்லங்கோடு மறைவட்டம்

### M.C.A கூட்டம்

கொல்லங்கோடு மறைவட்ட மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் கூட்டமானது 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புஷ்பகிரி பங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டம் மறைவட்ட முதன்மை குருவும், மறைமாவட்ட MCA இயக்குநருமான பேரருட்தந்தை இராபின்சன் அவர்கள் தலைமையில், மறைவட்ட MCA இயக்குநர் அருட்தந்தை அஜீஷ்குமார் மற்றும் மறைவட்ட MCA ஊக்குநர் அருட்சகோதரி ஜோபி ஜோர்ஜ் D.M அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்றது. கூட்டத்திற்கு அனைத்து பங்குகளிலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட MCA-யின் புதிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் MCA-யின் செயல்களையும், பொறுப்பாளர்களின் கடமைகளையும் எடுத்துரைத்து 2023 - '24 ஆண்டிற்கான MCA மறைவட்ட புதிய பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடத்தினார். புதிய மறைவட்ட MCA பொறுப்பாளர்கள் :

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | : | திரு. எட்வர்ட் ஜாண் | - மஞ்சத்தோப்பு |
| துணைத்தலைவர் 1 | : | திரு. றாபி | - புஷ்பகிரி |
| 2 | : | திருமதி. பேபி மேரி | - அடைக்காகுழி |
| செயலர் | : | திரு. ஜாண் | - அடைக்காகுழி |
| துணை செயலர் | : | திருமதி. விஜிலா ராணி | - கடுவாக்குழி |
| பொருளர் | : | திரு. பிரான்சிஸ் ராஜ் | - பாலவிளை |

# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

## இந்திய அரசியலமைப்பு நாள் குறித்த சிறப்பு பட்டிமன்றம் (Indian Constutional Day, Debate)

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 25.11.2022 அன்று மதியம் 2.00 மணியளவில் இந்திய அரசியலமைப்பு நாள் பற்றிய சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. இந்த பட்டிமன்றம் முதலாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்டது. இது அவர்களுக்கு புதுவித அனுபவமாக இருந்தது. இந்நிகழ்வானது கல்லூரியின் தாளாளர் தந்தை S. வர்க்கீஸ் அடிகளார் அவர்கள் தலைமையில், முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது

## வினாடி வினா (Quiz )

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 29.11.2022 அன்று வினாடி வினா நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர். ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் தலைமையில், முனைவர் றோஸ் பெசியா அவர்களால் முதலாமாண்டு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. இந்த வினாடி வினாவானது பாட சம்பந்தமாக இருப்பதால் கற்றலில் நல்ல புரிதல் பெற இயன்றது.

## எய்ட்ஸ் விழிப்புணர்வு வகுப்பு (Aids Awareness Programme)

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 13.12.2022 அன்று காலை 9.30 மணியளவில் எய்ட்ஸ் விழிப்புணர்வு வகுப்பு நடைபெற்றது. இந்த வகுப்பானது அருட்தந்தை பெர்னி வர்க்கீஸ் (Rev. Fr. Berny Varghese, National Secretary of CCPI, Chavara) அவர்களால் ஒருநாள் முழுவதும் நடத்தப்பட்டது.

## HOM- மாற்றுத் திறனாளிகளின் கிறிஸ்துமஸ் வாழ்த்துப்பாடல்

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 14.12.2022 அன்று குழித்துறையில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளியில் இருந்து வந்த மாணவர்கள் கிறிஸ்து பிறப்பு விழா நற்செய்தியினை அறிவிக்கும் பொருட்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துப் பாடலை பாடினார்கள். எங்கள் கல்லூரி மாணவர்கள் அவர்களை மகிழ்விக்கும் வண்ணமாக சிறப்பு நடனம் அனைத்து மாணவர்களும் இணைந்து ஆடினார்கள். மேலும் கல்லூரி நிர்வாகம் மற்றும் மாணவர்கள் சிறு





நன்கொடையினை வழங்கினார்கள். இந்நிகழ்வின் போது கல்லூரியின் முதல்வர் முனைவர் ஏஞ்சல் பெலிக்ஸ், மற்றும் பேராசிரியர்கள், அருட்சகோதரி. ஜெனிபா மேரி அவர்களும் உடனிருந்தனர்.

## கிறிஸ்துமஸ் விழா (Christmas day Celebration)

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 22.12.2022, 23.12.2022 ஆகிய இரண்டு நாட்கள் கிறிஸ்துமஸ் விழாவானது கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது 22.12.2022 பலவிதமான கலைப்போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது, 23.12.2022 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் கலைப்போட்டிகள் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து பெரோன் அலுவலகத்திலிருந்து பஜனை பவனியாக வரப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர். ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் கிறிஸ்துமஸ் விழாவினை துவக்கிவைத்தார். கிறிஸ்து பிறப்பு விழாவினை நினைவு கூறும் வண்ணம் கேக் வெட்டப் பட்டது. மேலும் கிறிஸ்துமஸ் நண்பனுக்கு அன்பை பகிரும் வண்ணமாக அன்புப் பரிசுகள்



பரிமாறப்பட்டது. மேலும் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மதியம் 2.00 மணியளவில் கிறிஸ்துமஸ் விழா அன்பின் விருந்து வழங்கப்பட்டது இதில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டனர். பேரருட்தந்தை. S.வர்க்கீஸ் அடிகளார் (தாளாளர்/செயலர்) அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை உரையாற்றினார். கல்லூரி காரியதரிசி அருட்தந்தை சிபி அவர்கள் சிறப்புரையாற்றினார். முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இவ்விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இவ்விழாவானது சுமார் 3.00 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

## LITTLE FLOWER MATRICULATION SCHOOL
## PUSHPAGIRI

The School organised a Book Fair on 16th & 17th December under the co-ordination of NAVAMONI DISTRIBUTORS, Chennai. The Principal Rev. Sr. Joby George inaugurated the event. All kinds of books were available and students bought books of their choice.



In order to strengthen the social feelings of the students the staff and the students visited Marthandam Bala Bhavan, St. Mary's Old age Home Mathar and St. Joseph's Old age Home & Rehabilitation Centre, Azhagiamandapam.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**ஜனவரி** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **20, 21** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



## ஆயரின் டிசம்பர் மாத நிகழ்வுகள்



1 ➢ அருட்தந்தை மேத்யு கடகம்பள்ளி அவர்களின் நினைவை முன்னிட்டு புத்தூர் ஆலயத்தில் நினைவு திருப்பலி நிறைவேற்றினார்.

2 ➢ கோட்டயம் விமலகிரி பேராலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

2 ➢ சுங்கான்கடை தூய சவேரியார் பொறியியல் கல்லூரியின் ஜூபிலி நிறைவு விழா கொண்டாட்டத்தில் கலந்துக்கொண்டார்.

2 ➢ அருட்தந்தை பென்னார்டு அவர்களின் அப்பாவின் இறுதி சடங்கிற்கு தலைமை தாங்கி இரங்கல் செய்தி வழங்கினார்.

2 ➢ மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பள்ளிக்கூட ஜூபிலி நிறைவு விழாவில் சிறப்புரையாற்றினார்.

3 ➢ பாலவிளை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

4 ➢ விமலபுரம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

4 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைப்பெற்ற மறைமாவட்ட இளையோர்களுக்கான விளையாட்டு போட்டியினை துவங்கி வைத்தார்.

4 ➢ மேக்கோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

5 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

6 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட குருக்கள் மன்றத்தின் கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

6 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

7 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

7 ➢ கோட்டார் ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவையின் கூடுகையில் கலந்துக் கொண்டார்.

8 ➢ திருவனந்தபுரம் கிறிஸ்துநகர் பள்ளிக் கூடத்தின் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்ட கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

9 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

9 ➢ ஆழ்வார்க்கோயில் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

10 ➢ மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகையின் குருத்துவ வாழ்வின் 50 மற்றும் ஆயர் திருநிலைப்பாட்டின் 25 ஆண்டு ஜூபிலி நிறைவு விழா திருப்பலியில் கலந்துக்கொண்டார்.



11 ➢ பாளை மறைமாவட்டத்தில் வைத்து நடைப்பெற்ற CRI உறுப்பினர்களுக்கான தியானத்தை வழிநடத்தினார்.

14 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

14 ➢ காதோலிக்கேட் மையத்தில் வைத்து நடைப்பெற்ற இளையோர் இயக்க இயக்குநர்களுக்கான பயிற்சி முகாமில் "Components of Youth Ministry" என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தார்.

16 ➢ மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைப்பெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாடத்திற்கு தலைமைத் தாங்கினார்.

17 ➢ தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்ற வின்சென்ட் தே பவுல் சங்க சிறப்பு தியானம் மற்றும் ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

17 ➢ நாஞ்சில் பால்பண்ணை அலுவலகத்தில் வைத்து நடைப்பெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

17 ➢ செல்லங்கோணம் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற தாய்மார் சங்க கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

17 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைப்பெற்ற மார்த்தாண்டம் நிதி லிமிடெட் உறுப்பினர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

18 ➢ கண்டன்விளை ஆலயத்தில் வைத்து நடைபெற்ற Labour Commission கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

18 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைப்பெற்ற உபதேசிமார் கூடுகைக்கு தலைமைத் தாங்கி கிறிஸ்துமஸ் பரிசுகளை வழங்கினார்.

18 ➢ தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட பொதுநிலையினர் கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு தலைமைத் தாற்கினார்.

19 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைப்பெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

20 ➢ மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத்தின் சார்பில் சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் கலந்துக் கொண்டு துவக்க மன்றாட்டை ஏறெடுத்தார்.

21 ➢ கிறிஸ்தவ ஐக்கிய பேரவை சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றி, ஏழை எளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

22 ➢ ஆயர் இல்ல பணியாளர்களுக்கான கிறிஸ்துமஸ் கூடுகையில் கலந்துக் கொண்டார்.

22 ➢ மிட்ஸ் அலுவலகத்தில் நடைப்பெற்ற கிறிஸ்துமஸ் கெண்டாட்ட கூடுகையில் கலந்துக் கொண்டார்.

22 ➢ மார் எப்ரேம் இளம் குருமடத்தில் நடைப்பெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்திற்கு தலைமைத் தாங்கினார்.

23 ➢ பனச்சமூடு துறவற இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

23 ➢ மார் இவானியோஸ் பள்ளிக்கூடத்தின் கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.

23 ➢ முளகுவிளை ஆலயத்தில் மறையுரையாற்றினார்.

23 ➢ சாங்கை கிறிஸ்தவ ஐக்கிய பேரவை சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றி, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

24 ➢ கிறிஸ்து பிறப்பு சிறப்பு திருச்சடங்கு மற்றும் திருப்பலியை புஷ்பகிரி ஆலயத்தில் நிறைவேற்றினார்.

26 ➢ பாத்திமாநகர் ஆலயத்தில் வைத்து குழந்தைகளுக்கு திருமுழுக்கு வழங்கினார்.

26 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற மறைவட்ட இளையோர் இயக்க இயக்குநர்களின் கூடுகைக்கு தலைமைத்தாங்கினார்.

26 ➢ விமலபுரத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்ட நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.

29 ➢ மறைமாவட்ட மறைக்கல்வி போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

29 ➢ பீச்ரோடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.



## இம்மாதம் நினைவு கூர

ஜனவரி 2023

1 – நம் ஆண்டவரின் பெயரிடல்
ஆங்கிலப் புத்தாண்டு தினம்
மார் பஸேலியோஸ், மார் கிரிகோரியோஸ்
மோறோன் மோர் பஸேலியோஸ் கர்தினால் கிளீமிஸ் ஆண்டகையின் பெயர்விழா

1


2 – மார் மக்காறியோஸ் ஈஹீதோயோ
3 – இறைவாக்கினர் மலாக்கி
புனித சாவற குரியாக்கோஸ் ஏலியாஸ்

3


4 – அமெரிக்கா – கானடா மறைமாவட்ட உதயம்
6 – தனஹா (நம் ஆண்டவரின் திருமுழுக்குத் திருநாள்)
7 – திருமுழுக்கு யோவானின் புகழ்ச்சி
புனித ஜுலியன்
8 – இரத்தசாட்சியாகிய புனித ஸ்தேவான்
பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் ஆண்டகையின் பெயர்விழா

6


11 – யூஹானோன் மார் தியடோஷியஸ் ஆண்டகையின் பெயர்விழா
14 – சீனாய் மலையின் 40 இரத்த சாட்சிகள்
15 – விதைகளை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
16 – கீவர்கீஸ் மார் திவன்னாசியோஸ் ஆண்டகையின் நினைவு
17 – எகிப்தின் மார் அந்தோணியார்
தோமஸ் மார் அந்தோணியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
18 – மோறோன் மோர் சிறில் பசேலியோஸ் காதோலிக்கோஸ் மற்றும் ஜோசப் மார் சேவேறியோஸ் ஆண்டகைகளின் நினைவு
அலெக்ஸாணடிரியாவின் மார் கூறிலோஸ், மார் அத்தனாசியோஸ்
திருச்சபையின் ஒன்றிப்பு வார மன்றாட்டு ஆரம்பம்
19 – கீவர்கீஸ் மார் மக்காறியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
20 – புனித செபஸ்தியார்
21 – புனித ஆக்னஸ்
22 – புனித திமோத்தியோஸ்
24 – புனித பிரான்சிஸ் சாலஸ்
25 – புனித பவுலின் மனமாற்றம்
திருச்சபையின் ஒன்றிப்பு வார மன்றாட்டு நிறைவு
26 – இந்திய குடியரசு தினம்

26


28 – புனித தோமஸ் அக்குவினாஸ்
29 – மார் இக்னாத்தியோஸ், யோசுவா மார் இக்னாத்தியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
31 – புனித டோண் போஸ்கோ

31


## மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகையின் குருத்துவ திருநிலைப்பாட்டின் பொன்விழா மற்றும் ஆயர் திருநிலைப்பாட்டின் வெள்ளிவிழா கொண்டாட்டங்கள்

### மார்த்தாண்டம் மறைமாவட்டம்











## மறைமாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள்

### இளையோர் இயக்கம் 2022






